இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள். இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன்; ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்." (யோவான் 15:12-15)

# வாழ்க்கைக் கூட செயற்கையானதாக மாறிப்போச்சு!




மனிதர்கள், பூமியை எவ்வளவு சேதப்படுத்திவருகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லிய அந்தப் புரட்சிப் பேரணிக்குப் பின்னால் இருந்தவர்களில் முக்கியமானவர் `கேலார்டு நெல்சன்' என்பவர். இந்தப் பேரணியைத் தொடர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 22ஆம் தேதியை உலகப் புவி தினமாக பல நாடுகள் 1970ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கத் துவங்கின. 1990ஆம் ஆண்டிற்குள் 140 நாடுகளுக்கு மேல் இந்த நாளைச் சிறப்பிக்கத் துவங்கின. இன்று 175க்கும் மேற்பட்ட நாடுகள் உலக பூமி நாளை ஏப்ரல் 22 அன்று சிறப்பிக்கின்றன.

பூமியின் 70 விழுக்காட்டுக்கும் அதிகமான பகுதியை நீர் சூழ்ந்துள்ளது. பூமியின் மேற்பரப்பில் முக்கால்வாசி பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது, மற்றும் பூமியின் மொத்த நீரில் 97 விழுக்காடு கடல்களில் உப்பு நீராக உள்ளது. இது தவிர, பூமியின் 90 விழுக்காடு தூய்மையான நீர் பனிக்கட்டியில் அடைக்கப்பட்டுள்ளது.

காடுகளை அழித்து வீடுகளை உருவாக்கி நாகரிகம் வளர்த்த நாம், இன்று மீண்டும் மரங்களை வளர்த்தால்தான் மகிழ்ச்சி நீடிக்கும் என உணரத் தொடங்கி இருக்கிறோம். காடுகள், மலைகள், பாலைவனங்கள், ஆறுகள், சமவெளிகள், மிகப்பெரிய நிலப்பரப்பு என அனைத்தும் தன்னுள் அடக்கி உயிரின வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்களைத் தருவது நம் பூமி. ஆனால், அண்மை ஆண்டுகளில் எங்கு பார்த்தாலும் இயற்கை பேரிடர்கள். இதற்குக் காரணம் புவி வெப்பமயமாதல், சுற்றுச்சூழல் மாசுபாடு, மக்கள் தொகை பெருக்கம், தொழில்மயமாதல் எனக் காரணங்களை அடுக்கிக்கொண்டேச் செல்லலாம். இன்று நம் பூமி இந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டு இருப்பதற்கு நாமும், நம் வாழ்க்கை முறையும்தான் காரணம். அறிவியல் என்ற பெயரிலும், கண்டுபிடிப்புகள் என்ற பெயரிலும் தினமும் பூமியைக் காயப்படுத்துகிறோம். இயற்கையோடு இணைந்த அறிவியலால் மட்டுமே மனித குலத்திற்கு நன்மை ஏற்படும், இயற்கைக்கு எதிரான அறிவியல் சிறிய நன்மையையும், பெரிய தீமையையும் கொண்டிருக்கும் என்பதை உணராமல் ஓடிக்கொண்டிருக்கிறோம்.


உலகை பாதிக்கும் நெகிழி (பிளாஸ்டிக்)

"பயன்படுத்தியபின் தூக்கி எறி" கலாச்சாரம்தான் இன்றைய உலகை இயக்குகிறது. இன்றைய இயந்திரச் சூழலில் நமக்கும் இயற்கைக்குமான உறவைப்பற்றி சிந்திக்க நேரமின்றி ஓடிக்கொண்டே இருக்கிறோம். நம்மை தாங்கிக் கொண்டிருக்கும் பூமியைப்பற்றிச் சிந்திக்கக்கூட நமக்கு "உலக பூமி தினம்" என்று ஒரு நாள் தேவைப்படுவதுதான் வேடிக்கை.

இன்று நிலம், நீர், காற்று மாசு அதாவது சுற்றுச்சூழல் மாசுபடுதல் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் அன்றாடம் சுற்றித்திரிந்த சிட்டுக்குருவி இனங்கள் இன்று காண்பதற்கு அரிதாகிப் போனது. 2050ஆம் ஆண்டிற்குள் ஐம்பது விழுக்காட்டு உயிரினங்கள் பூமியிலிருந்து நிரந்தரமாக விடைபெற்றுக் கொள்ளும் என்ற தகவல் மிகவும் வேதனை தருகிறது.

புகழ் பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது ஓர் ஆராய்ச்சியின் போது, "தேனீக்கள் என்று அழிகிறதோ அன்று உலகமும் அழிந்துபோகும்" என்று மேற்கோள்காட்டி கூறியுள்ளார். அதிகமான பூச்சி கொல்லி உபயோகம், மகரந்த சேர்க்கைக்கு உதவும் தேனீ உள்ளிட்ட பல்வேறு பூச்சி இனங்களை கொல்வதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. தேனீக்கள் அழிந்தால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படும். இந்நிலை தொடர்ந்தால் வெகு விரைவில் மனிதனும் அழியும் விலங்கினங்கள் பட்டியலில் நிச்சயம் சேர்ந்துவிடுவான் என ஆராய்ச்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இயற்கையும், எதிர்காலமும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையவை. இயற்கையை மாசுபடுத்தி, அதை சிறுக சிறுக சிதைத்தால் நமது எதிர்காலம் உறுதியாக பாதிக்கப்படும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

நம் அனைவருக்கும் பொதுவான அன்பின், ஆறுதலின் மடி, பூமித்தாய்தான், அந்த தாய் மண்தான். பெற்றவள் தன் குழந்தைகளுக்குத்தான் தாய். ஆனால் பூமியோ நம் ஒவ்வொருவருக்கும் தாய்

இயற்கைச் சமநிலை பாதிக்கப்படும் வரை நம்மால் நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியாது. உணர்வோம். உடனடி செயல்படுவோம்.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்

## காஜாங்கில் 'எண்ணிக்கை நூல்' விளக்கவுரை சொற்பொழிவு நடைபெற்றது

காஜாங்: கடந்த ஏப்ரல் 21-ம் திகதி, இங்குள்ள திருக்குடும்ப ஆலயத்தில், தம்பின் புனித ஜோன் வியான்னி பங்குதந்தை அருள்பணி ஆல்பர்ட் ஆரோக்கியசாமி அவர்கள் "எண்ணிக்கை நூல் " பற்றிய விளக்கவுரை சொற்பொழிவு ஒன்றை வழிநடத்தினார். இப்பங்கில் மாதந்தோறும் நடைபெறும் விவிலிய வகுப்பில் 60க்கும் குறையாதோர் கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குடும்ப ஆலய உதவிப்பங்கு தந்தை போனவேஞ்சர் இராயப்பன் உட்பட இப்பங்கின் திருவிவிலியப் பணிக்குழுவினர் விவிலிய வகுப்பை நடத்தி வருகின்றனர்.

அருள்பணி அவர்கள், இந்நூலில் இடம் பெறும் போருக்குத் தகுதியான ஆண்களின்



இரு கணக்கெடுப்பு, உடன்படிக்கைப் பேழைக்கு இஸ்ரயேலரின் கோத்திரங்கள் வழங்கிய பாதுகாப்பு, அணிவகுப்பு, கானான் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட உளவு மற்றும் கடவுளின அறிவுரைகள் ஆகியவற்றை சற்று ஆழமாகவும் இன்றைய வாழ்க்கை, வழிபாடு நம்பிக்கை ஆகியவற்றோடு ஒப்பிட்டு ஆன்மீகத்திற்கான படிப்பினையாகவும் எடுத்தியம்பினார்.

சீனாய் மலையடிவாரத்தை விட்டுப் புறப்பட்டு, வாக்களிக்கப்பட்ட நாட்டின் யோர்தான் நதியின் கிழக்கு எல்லையை அடைந்ததுவரை ஏறக்குறைய 40 ஆண்டுகளாக நிகழ்ந்தனவற்றின் வரலாற்றுத் தொகுப்பை அருள்பணி அவர்கள் எளிமையாக விளக்கிக் கூறியது சிறந்தப் படைப்பாக அமைந்தது. நிறைவாக, ஏற்பாட்டுக்குழுவினரின் நன்றியோடு சொற்பொழிவு நிறைவுற்றது.

*-அந்தோனி இன்னாசி, சைபர் ஜெயா.*

# ‘ஆண்டவரின் விண்ணேற்றம்’ சாட்சிய வாழ்வின் முன்னேற்றம்

எதிர்வரும் வியாழன் மே திங்கள் 9-ம் நாளன்று, ஆண்டவரின் விண்ணேற்ற பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். இதனிமித்தம் சிந்தனைக்கு இயேசு விண்ணேற்றம் அடைந்தபின் நிகழ்ந்ததாய்ச் சொல்லப்படும் ஒரு கற்பனைக் கதை.

இயேசு விண்ணகம் சென்றதும், தலைமைத்தூதர் கபிரியேல் அவரைச் சந்தித்தார். "உங்கள் பணியைத் திறம்பட முடித்துவிட்டீர்கள். உலகில் உங்கள் நற்செய்தியைத் தொடர்ந்து பரப்புவதற்கு என்ன திட்டங்கள் வைத்துள்ளீர்கள்?" என்று கேட்டார்.

"என்னுடையப் பணியைத் தொடரும்படி ஒரு சில மீனவர்களிடமும், வரி வசூலிப்பவர்களிடமும் சொல்லியிருக்கிறேன்" என்று இயேசு சொன்னதும், கபிரியேல் தூதர் அவரிடம், "யார்... அந்தப் பேதுரு, தோமா, இவர்களைப்பற்றி சொல்கிறீர்களா? அவர்களைப் பற்றித்தான் உங்களுக்கு நன்கு தெரியுமே... ஒருவர் உங்களைத் தெரியாது என்று மறுதலித்தார், மற்றொருவர் உங்களை நம்பவில்லை. இவர்களை நம்பியா இந்த மாபெரும் பணியை ஒப்படைத்தீர்கள்? கட்டாயம் வேறு சில நல்ல திட்டங்கள் உங்கள் எண்ணத்தில் இருக்கும், அப்படித்தானே?" என்று கேட்டார்.

இயேசு அவரிடம் அமைதியாக, "நற்செய்திப் பரப்பும் பணியை, இவர்களை நம்பியே நான் ஒப்படைத்துள்ளேன். இவர்களைத்தவிர, என்னிடம் வேறு எந்தத்



திட்டமும் கிடையாது" என்று பதிலளித்தார்.

இருபது நூற்றாண்டுகளைத் தாண்டி, நற்செய்தி, இன்றும், இவ்வுலகில் உயிரோடு வாழ்ந்துவருகிறது என்றால், இன்றும் அர்த்தம் உள்ளதாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், நற்செய்தியை, தங்கள் அறிவுத்திறன் கொண்டு, சொல்லாற்றல் கொண்டு போதித்தவர்களோ, அவர்கள் பயன்படுத்திய விளம்பர உத்திகளோ அல்ல. மாறாக, நற்செய்தியும், அதன் மையமான இயேசுவும்தான் காரணம்.

இயேசுவுக்கும், அவரது நற்செய்திக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், போதிப்பவரின் புகழுக்கும், அவர் பயன்படுத்தும் வார்த்தை வித்தைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட வேளைகளில், நற்செய்தி தடைபட்டது என்பதை, கிறிஸ்தவ வரலாறு, மீண்டும், மீண்டும், நமக்குச் சொல்லித்தருகிறது.

நற்செய்தியைப் பறைசாற்றவும், இயேசுவின் சாட்சிகளாய் இருக்கவும் நமக்கு அழைப்பு விடுக்கும் விண்ணேற்ற பெருவிழாவன்று, நற்செய்தியை தங்கள் வாழ்வாக்கிய அசிசி நகர் பிரான்சிஸ், அன்னை தெரேசா போன்ற புனிதர்களுக்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம். அவர்கள், தங்கள் வாழ்வால் போதித்த நற்செய்தியே, இவ்வுலகில் பெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளன என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா நமக்கு வழங்கும் எண்ணங்களை அசைபோடுவோம். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15), என்று, இன்றைய நற்செய்தியில் இயேசு விடுத்த கட்டளையும், "உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" அவர் வழங்கிய உறுதிமொழியும், இவ்விழாவின் உயிர் நாடியாக விளங்கும் இரு கருத்துக்கள். நற்செய்தியைப் பறைசாற்றுவதும், கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பதும், கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் என்பதை ஆழ்ந்துணர்ந்து வாழ்வால் சாட்சி பகிர்வோம்.

இயேசு சீடர்களுக்கு ஆசி
வழங்கிக்கொண்டிருந்தபோதே
அவர்களிடமிருந்து பிரிந்து விண்ணேற்றம்
அடைந்தார். (லூக்கா 24:52)

*-ஆதாரம் : வத்திக்கான் வானொலி*

# ஈஸ்டர் தின குண்டுவெடிப்பில் நீதி வேண்டும் : இலங்கை தலத்திருஅவை

இலங்கை கத்தோலிக்கத் தலத்திருஅவை அதிகாரிகள், ஏப்ரல் 21-ஆம் தேதி உயிர்ப்பு ஞாயிறு குண்டுவெடிப்பின் ஐந்தாமாண்டு நிறைவை நினைவுகூர்ந்துள்ள வேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதிப்படுத்த பாரபட்சமற்ற மற்றும் நியாயமான விசாரணைக்கான கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கிறது யூகான் செய்தி




*குண்டுவெடிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலி!*

நிறுவனம்.

ஐந்தாண்டுகளுக்கு முன், ஏப்ரல் 21, 2019 இன் துயரமான நிகழ்வுகள், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்க சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்பை நினைவுகூர்கிறோம். அந்த பாஸ்கா ஞாயிறு அன்று, தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் தற்கொலை குண்டுதாரிகளின் ஒருங்கிணைந்த தாக்குதல்கள் 269 பேரின் உயிர்களைக் கொன்றது மற்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் 171 கத்தோலிக்க விசுவாசிகள் கொழும்பில் உள்ள புனித செபஸ்தியார் மற்றும் புனித அந்தோணியார் தேவாலயங்களில் திருப்பலிக்கு வந்திருந்தனர்.

இந்த சோகத்திற்கு பதிலளிக்கும் விதமாக, 50,000 க்கும் மேற்பட்ட கத்தோலிக்கர்கள் ஒன்று கூடி, பாதிக்கப்பட்ட 171 பேரை அருளாளர்களாக அங்கீகரிக்குமாறு இலங்கையில் உள்ள திருஅவைக்கு மனு அளித்துள்ளனர். இந்த மனு கொழும்பு பேராயர் கர்தினால் ஆல்பர்ட் மல்கம் ரஞ்சித்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்போது, படுகொலை நடந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, உள்ளூர் திருஅவை இந்த 171 கத்தோலிக்கர்களை அருளாளர்களாக அங்கீகரிக்கும் செயல் முறையைத் தொடங்குவதற்கான அதன் விருப்பத்தை அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, கொழும்பின் உயர் மறைமாவட்டம், ‘புனிதர்கள்’ அங்கீகரத்திற்கான பேராலயத் திடம், புனிதர் பட்டம் வழங்குவதற்கான மறைமாவட்ட ஆய்வைத் தொடங்குமாறு முறைப்படி கோரும். கத்தோலிக்கத் திருஅவையில் அருளாளர்களைப் புனிதர்களாக அறிவிக்கப்படு வதற்கான முதல் படியாக பாதிக்கப்பட்டவர்களின் முழு வாழ்க்கை, நற்பண்புகள் மற்றும் இறப்புகள் பற்றிய முழுமையான விசாரணையின் தொடக்கத்தை இந்தப் படி குறிக்கிறது.

கடந்த ஏப்ரல் 21-ஆம் தேதி உயிர்ப்பு ஞாயிறு குண்டுவெடிப்பின் ஐந்தாமாண்டு நிறைவை நினைவுகூர்ந்துள்ள வேளை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோணியார் திருத்தலத்தில் உரையாற்றிய கர்தினால் இரஞ்சித் அவர்கள், உண்மையும் நீதியும் தூக்கி எறியப்பட வேண்டிய விளையாட்டுப் பொருட்கள் அல்ல என்றும், இரப்பர் பந்தை எப்படி நீருக்கடியில் எப்போதும் அமுழ்த்தி வைக்க முடியாதோ, அவ்வாறே நீதியையும் மறைத்துவைக்க முடியாது என்றும் விளக்கினார்,





# அன்பே நமது முதன்மை அணிகலன் ஆகட்டும்!

இன்று பாஸ்கா காலத்தின் 6-ம் ஞாயிறு. ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழாவுக்கு ஆயத்தம் செய்யும் வாரமாகவும் முதல் வாசகத்தில் பேதுரு கடவுள் ஆள்பார்த்துச் செயல்படுவதில்லை என்றும், கடவுளுக்கு அஞ்சி நேர்மையாக நடப்போர் யாராக இருந்தாலும் அவர்கள் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் என்றும் பேதுரு விளக்கிக் கூறுகிறார்.

திருத்தூதர் யோவான் எழுதியுள்ள இன்றைய இரண்டாம் வாசகத்தில் அன்பே கடவுள். அது கடவுளிடமிருந்தே வருகிறது என்றும், அன்பே வடிவான கடவுள் தன் அன்பின் வெளிப்பாடாக தன் மகனை நம் பாவங்களுக்கு பரிகாரமாக நமக்களித்துள்ளார் என்றும் விவரிக்கிறார். தொடர்ந்து, நமது பகைவர்களையும் அன்பு செய்வது இயேசுவின் அன்பு; அது நம்மை இயேசுவுக்குள் வாழவைக்கும் என்பதையும் தெளிவுர எடுத்துரைக்கிறார்.

வழக்கமாக நாம் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோம் என்ற ஒரே காரணத் திற்காகவோ, அல்லது திருஅவையில் இணைந்திருக்கிறோம் என்பதற்காகவோ நமக்கு உறுதியாக மீட்பு உண்டு என்று




கருதிவிட முடியாது. மாறாக, நாம் அன்பில் நிலைத்திருக்க வேண்டும். சென்ற ஞாயிற்றுக்கிழமை நாம் வாசிக்கக்கேட்ட நற்செய்தியின் தொடர்ச்சியான இன்றைய நற்செய்தியில் தம் ஆண்டவர் அன்பை வலியுறுத்துகின்றார்,

இயேசு, ‘நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் என்னிடம் அன்பு கொண்டிருங்கள் என்று கூறக் கிடையாது. அவர் நம்மை அன்பு செய்தது போன்று நாம் மற்றவரை அன்புசெய்கின்றபோது இறைவன் நமக்கு எத்தகைய கைம்மாறு தருவார் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் சுட்டிக்கட்டத் தவறவில்லை. கடவுள் அன்பாய் இருக்கிறார். நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார் என்கிறார் திருத்தூதர் யோவான்.

இயேசு, “நான் கட்டளையிடுவதை எல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்” என்கிறார். அப்படியெனில், இயேசு கட்டளையிட்டதை நாம் செய்தால், அவரது நண்பர்களாக நாம் இருப்போம் என்பது உறுதி. மேலும், ஆண்டவர் இயேசு தன் சீடர்களைப் பணியாளர்களாகக் கருதாமல், நண்பர்களாகக் கருதி, அவர்களை உயர்வாக நடத்தினார். எனவே, நம்மில் நாம் யாரையும் தாழ்வாகவோ, இழிவாகவோ

**பாஸ்கா 6 ஆம் வாரம் - ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | தி.ப.10:25-26,34-35,44-48 |
| திரு.பாடல் | 98: 1. 2-3ab. 3cd-4 |
| 2-ம் வாசகம் | 1 யோவான் 4: 7-10 |
| நற்செய்தி | யோவான் 15: 9-17 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**

எண்ணி சமூகத்தில் வேறுபடுத்தினால், நம் ஒருபோதும் இயேசுவின் நண்பர்களாக இருக்க முடியாது.

நம்மோடு வெகுகாலமாக பழகி வரும் நண்பர்களில் ஒருசிலர் துன்புற நேர்ந்தால், உடுக்கை (ஆடை) இழந்தவன் கைபோல ஓடிச் சென்று உதவ வேண்டும். இயேசுவைப் போல் உயிரைக் கொடுக்க மனமில்லாவிட்டாலும் இருப்பதைப் பகிர்ந்து உறவை நிலைநாட்ட வேண்டும்.

*-ஆர்.கே.*